**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 13.03.2025

Case No. MCOP.188/2019

P.W. 1

**திரு. காசி பாண்டியன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>குறுக்கு விசாரணை</u> : (2ம் எதிர்மனுதாரருக்காக)**

எனக்கு ஏற்பட்ட காயங்கள் சிறிய அளவிலானவை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்துக்கு வரும் போது யாருடைய துணையில்லாமல் நான் மட்டும் தான் வந்தேன் என்றால் சரிதான். நான் TN PY 01CM3366 என்ற ஆம்னி பஸ்சில் பயணம் செய்த போது தான் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் பேருந்தின் எந்த சீட்டில் அமர்ந்திருந்தேன் என்று எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பேரூந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் போது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனது மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல்க அறிக்கையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பேருந்து செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. NL 01 B1025 என்ற ஆம்னி பஸ் எதிரே வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. எங்களது பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் தூங்கி விட்டதால் தான் விபத்து ஏற்பட்டது. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்த இழப்பீடும் எனக்கு வழங்கத் தேவையில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் வாகனம் எதிரில் மோதி தான் இந்த விபத்து ஏற்பட்டது என்பதால் அந்த வாகனத்தின் காப்பீட்டாளர் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் தவறு. என்னுடைய சம்பள சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக நான் மனுவில் கூறியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோரிய இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.03.13 15:50:13 +0530

**குறுக்கு விசாரணை : (4 ம் எதிர்மனுதாரருக்காக)**

நான் பயணம் செய்த பேருந்து ஓட்டுநர் மீது தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் மீது தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநரின் தவறால் தான் இந்த விபத்து நிகழ்ந்தால் அந்த பேருந்தின் உரிமையாளரும் காப்பீட்டாளரும் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரிதான். எனவே 4 ம் எதிர்மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :**

இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.03.13 15:50:20 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**